# ‘வண்ணங்கள் மாறுவதில்லை’ என்னும் சிறுகதை சித்தரிக்கும் பெண்களின் சமூக நிலை

**இரா.மகேஸ்வரி**
*ஆய்வியல் நிறைஞர் (தமிழ்த்துறை)*
*சக்தி மகளிர் அறிவியல் கலைக் கல்லூரி*
*ஒட்டன்சத்திரம்*

**முன்னுரை**

**ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்**
**அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம் - பாரதியார்**

என்ற பாரதியார் கூற்றுப்படி பல்வேறு பாகுபாடுகளை நீக்கி, ஆண் - பெண் சமத்துவம் காண்பதற்கான முயற்;சிகள் உலகம் முழுவதுமே செயல்பட்டு வருகிறது. ஆனால் ‘பாலினச் சமத்துவம்’ என்பது இன்றுவரை கேள்விக்குறியாகவே உள்ளது. ‘நிலவு’ என வருணிக்கப்பட்ட பெண்கள், இப்போது நிலவு வரை சென்று சாதனை படைத்து வருகின்றனர். பெண்ணின் பெருமைகளையும், திறமைகளையும், சமூகம் சரியாக மதிப்பிட்டாலும் கூட பெண் பற்றிய மதிப்பு (value) இன்னும் மாறவில்லை. இன்று வரை பெண்களுக்கு எதிராகக் காட்டப்படும் பாகுபாட்டைக் காணலாம்:

1. பிறப்பில் காட்டப்படும் பாகுபாடு
2. வளரும் போது காட்டப்படும் பாகுபாடு
3. பொருளாதார ரீதியான பாகுபாடு

என பெண்களுக்கு உரிய பண்புநலன்களை வரையறுத்து கூறப்படுகிறது. அழகு, மென்மை, நளினம், பொறுப்புணர்வு, தியாகம், பொறுமை, இரக்கம், அடங்கிப்போதல், அறிவு, ஆற்றலின்மை, இயலாமை உணர்வு, போன்ற பண்புகளுக்குப் பெண்களுக்காகவே உருவாக்கப்படுகிறது. கூடி வாழும் சமூக வாழ்வின் அனுபவித்திலிருந்து எழுந்த வாழ்வியல் கூறாக பெண்களின் மதிப்பு அமைகிறது.

**பண்பாட்டு மதிப்புகள்**

ஒவ்வொரு சமுதாயமும் தனக்கெனத் தனியான பண்பாட்டினைக் கொண்டிருக்கின்றது. தனி மனிதர்களாகத் தீவு போன்று வாழ முடியாது, பெண்கள் இணைந்து உன்னதமான வாழ்க்கை வாழுவதற்கு அடிப்படையாக அமையும் வாழ்வியல் நெறிகள் பண்பாட்டு மதிப்புகள் ஆகும்

**பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல் என்றும்**
**பண்புடையார் பட்டுண்டு உலகம். - (குறள் 996)**

என்றும் இலக்கியங்கள் பண்பாட்டின் சிறப்பை உணர்த்துகின்றன அன்பு, இரக்கம், கருணை, தியாகம், எளிமை, ஒழுக்கம், கல்வி, விட்டுக்கொடுத்தல், விருந்தோம்பல், பொறுமை, வீரம், காதல், மானம், நட்பு, கொடை, போன்றவை மனிதர்களிடம் காணலாகும் பண்பு நலன்களை பெண்களுக்கு என இலக்கியங்கள் வழியாக உணர்த்தப்படுகிறது.

**அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை**
**ஐந்து சால் பூன்றிய தூண் - (குறள்983)**

என்று திருவள்ளுவரின் குறள் வாயிலாக உணரலாம்.

அற இலக்கியங்கள் பல்வேறு வாழ்வியல் மதிப்புகளைக் கற்றுத்தருகின்றன. தமிழ்ச்சமூகத்தில் விருந்தோம்பல் என்பது பெண்களுக்கு தனிச்சமூக மதிப்பாகப் போற்றப்படுகிறது. “பெண்கள் தனி ஆளுமைத்திறனாகப் பிறரோடு நல்லிணக்கம் கொண்டு வாழ்வதற்கு வழிகாட்டுகிற மதிப்புகளுள் பிறரன்பு சிறந்தது” என ஆங்கில நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியரின் கருத்து ஒரு சிறந்த சான்றாக அமைகின்றது.

**வண்ணங்கள் மாறுவதில்லை என்னும் சிறுகதையில் காணலாகும் பெண்களின் நிலை**

தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறிந்த பண்பட்ட புதுமை எழுத்தாளர் ஜெயரதிஅவர்கள் உள்ளடக்கமும், உருவமும், கலை அழகுடன் கைகோர்த்துச் செல்வதால் 'பொருள் புதிது, சுவை புதிது' என்ற பெருமையைப் இச்சிறுகதை மூலம் உணரமுடிகிறது. இச்சிறுகதையில் காணலாகும் பெண்களின் நிலை, உள்ளத்தின் கோபத்தை இலக்கியமாக்கும் போது அது எத்தனை இனிமையாகிவிடுகிறது என்பதை இக்கதைகள் உணர்த்துகின்றனது

'நூலுக்கு நூல் நுண்மான் நுழைபுலம்' என்னும் முறைக்கேற்ப பெண்ணியம் சார்ந்த சிறுகதையில் பெண் எழுத்தாளரின் முத்திரையை அழுத்தமாகப் பதிவுசெய்திருப்பதை அறியமுடிகிறது. கிருதயுகம் எழுக மாதோ' என்ற பாரதியின் பாடலுக்கு ஏற்ப இலக்கியத்தில் புதிய உலகம்படைக்கச் சமூகம் சார்ந்த பெண்ணிய மதிப்புகளை வலியுறுத்துகின்றன.

**பெண்களின் ஆக்க உணர்வின் வெளிப்பாடுகள்**

'முதலெழுத்து' என்னும் கதையில் பேச்சியம்மாளின் கனவுகளை கலைக்கும் அப்பாவின் அவலநிலையைக் காணலாம். பிஞ்சு உள்ளத்தில் வெம்பிய கனவுகள் பேச்சியம்மாளின் கண்களில் கண்ணீரை வரவழைத்தன. அடுத்தாக 'கட்டில் பேசுகிறது' என்ற கதை உள்ளத்தை உடைக்கிறது. பிற்பகல் என்னும் கதையில் மாமியார் - மருமகளின் உள்ள உறவுநிலை சித்தரிக்கப்படுகிறது.

**கொடுமை - கொடுமை -முதுமை**
**அதனினும் கொடுமை - வியாதி**

என்னும் பரிதாப நிலையில் இருக்கும்; மாமியார் நிலையை அழகாக காட்சிப்படுத்துகிறார். 'முச்சந்தி' என்னும் கதை "ஒளியிழந்த கண்களுக்குள் ஆயிரம் மின் விளக்குகள், ஏதோ ஒரு புதுயுகம் பிறப்பது போன்றிருந்தது. அந்தப் பெரியவருக்கு முதியோர் இல்லத்திற்கான முதல் விதை எத்தனை 'வேதனையானது'!

'மாறுகின்ற 'கோலங்கள்' தற்கால கணினியுகத்தில் நேரத்தைப்போக்கும் இளம் தலைமுறையின் பாதிப்புகளை உணரலாம். 'உடைந்த சாடி' என்னும் கதையில் புதைந்துள்ள அக்கா - தம்பியின் பாசத்தை உணரலாம். 'பெயருக்குச் சுமையா'? என்னும் கதையில் கசப்பான எண்ணங்களைத் துப்புதல் வேண்டும் என எழுத்தாளர் இந்திரா வலியுறுத்துகிறார்.

'வடுக்களின் வலிகள்' என்னும் கதையில் புதுமணப்பெண் பவ்யா, குடும்ப உறவுகள் நடுவில் தனிமரமாய் நின்றாள் என்னும் சோகத்தை வலிகள் மூலம் ஆழமாகச் சித்தரிக்கப்படுகிறது.

'படியில் பயணம் நொடியில் மரணம்' என்னும் வாசகத்தின் மூலம் கல்லூரியில் படிக்கும் பிரவீணாவின் அலட்சியப் போக்கால் தன் தந்தையின் உயிரைப் பறிக்கும் நிலை சிறுகதை வாயிலாக உணர்த்தப்பட்டுள்ளது. கல்லூரிக்கு சென்றவுடன் ரேகாவின் மனநிலை மாற்றத்தைக் கண்ட தாய்க்குப் பெரும் அதிர்ச்சியை எடுத்தியம்புகிறது. தன் பிள்ளைக்கு சிறகு முளைத்து விட்டது என எண்ணிச் சரிந்தாள் தாய்.

'வாழுகின்ற மனிதர்களுக்குள் எத்தனை வண்ணங்கள். பெண்களுக்கு எத்தனை வாழ்க்கைப் போராட்டங்கள் என்பதை இச்சிறுகதைத் தொகுப்பின் வாயிலாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

**பெண்கல்வி**

ரூசோபோன்ற பேரறிஞர்களும், காந்தி போன்ற பெருந்தலைவர்களும் "பெண்கல்வி" என்பது ஆண்களது தேவைகளை நிறைவுசெய்யும் வகையிலே அமைதல்வேண்டும் என்று கருதினார். தத்துவம், அறிவியல் படிப்புகளெல்லாம் பெண்களுக்குத் தேவையில்லை. சமயம் - நல்லொழுக்கம் - இல்லமுன்னேற்றம், இவைகளுக்கான படிப்பே பெண்களுக்குப் போதுமானது' என்று நினைத்தனர். ஆனால் பாரதியாரோ "பெண்கள்" எல்லாத்துறையிலும் வல்லவராக விளங்கவேண்டும். எனவே அவர்களுக்கென்று தனிக்கல்வி தேவையில்லை. என்று நினைத்தார்'. எனவே பெண்களை புதுமைப்பெண்களாகப் படைத்துக் காட்டும் போது

**சாத்திரங்கள் பலபல கற்பராம்**
**சவுரியங்கள் பலபல செய்வராம்**
**மூத்தப் பொய்கைகள் யாவும் அழிப்பாராம்**
**மூடக்கட்டுக்கள் யாவுந் தகர்ப்பராம் .. (பா.கவிதைகள்.545)**

என்று பாடுகிறார். ஆணுக்குச் சமமான கல்வித்திறமை பெண்களுக்குப் பொதுப்படையாக ஏற்படும் வரை ஆண்மக்கள், பெண்மக்களைத் தக்கப்படி மதிக்கமாட்டார்கள் தாழ்வாகவே நடத்துவார்கள் என்று கூறுகிறார். அதாவது கல்வியில் சமத்துவம் இல்லாவிட்டால் மீண்டும் ஏற்றத்தாழ்வே ஏற்படும் என்று கூறும் பாரதியார். தமிழ்நாடு மாதர் சம்பூர்ணமான விடுதலைப் பெறவேண்டும்.

**பெண்கள் அறிவை வளர்த்தால் வையம்**
**பேதமை அகற்றிடும் காணீர் (பா.க.ப.538)**

என்று கூறும் பாரதியார் பெண்களுக்கும் ஆண்களைப் போலவே சமதர்ம,சமத்துவ உரிமை உண்டு என்றும் அவர்கள் கல்விஅறிவு பெற்றுத் திகழவேண்டும் என்று கூறுகிறார்.

### அனுபவங்களின் - உளவியல் - பாகுபாடு

மகாபாரதம் மூலம் பாஞ்சாலி பலர் முன்னிலையில் துகிலுரியப்படும் காட்சியினை நாம் காப்பியத்தில் படிக்கும் போது நமக்கே துச்சாதன் மீதும் - துரியோதனன் பாலும் சீற்றவுணர்ச்சி ஏற்படுகிறது. உண்மையில் கணவனாகிய தருமனுக்கு எத்தனைச் சீற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும என்பது இயற்கை. உளவியல் ரீதியில் ஆராயும் போது இயற்கைக்கு முரணானது என்று கொள்வோம். தருமன் இத்தகைய பொறுமையை மேற்கொண்டது அவள் உள்ளுணர்வினாலேயாம். இது புலனுக்கு அப்பாற்பட்டது. எல்லையற்றப் பொறுமையை மேற்கொள்வானாயின்- அவன் இறுதியில் எய்தமுடியும் என்ற உண்மையினை வில்லி பாரதத்திலுள்ள பாடல்கள் வழி அறியலாம். இப்பாடல் பெரிதும் இலக்கிய மதிப்புடையது என்பதை அறியமுடிகிறது.

**வோர்ட்ஸ் வொர்த் - மனப்படைப்பு**
**கோல நெடுங்கண் மகளிர்**
**கூந்தல் பரப்பியிருப்பப்**
**பீலி மஞ்ஞை நோக்கிப்**
**பேடை மயிலென் றெண்ணி**
**அவிச் சென்று புல்லி**
**யன்மை கண்டு நாணிச்**
**சோலை நோக்கி நடக்கும்**
**தோகை வண்ணங் காண்பின்**

ஆண்மயில் தன் தோகையை விரித்தாடுவதை அழகிய நெடுங்கண் படைத்த நங்கையர் காண்கின்றனர். ஒரு முழுமையான படைப்பை உருவாக்கிக்காட்டுகிறார் திருத்தக்கதேவர். தம் கூந்தலை விரித்த வண்ணம் நின்று கண்டு மகிழும் பெண்டிரைத் தன் ஆண்மயில் என்று கருதிப் பெண்மயில் சென்று அவர்களைச் தழுவிக்கொள்ளுதல் உண்மையில் வேடிக்கையான காட்சி என்று வோர்ட்ஸ் வொர்த் அவர்கள் பெண்களின் கூந்தலை உருவகித்துக் காட்டுகிறார் என்பதை நாம் உணர முடிகிறது.

### பெண்ணுரிமைகள்

பாரதி விடுதலைப் பெண்களுக்குச் சில சமூக உரிமைகள் வேண்டும் என்று பட்டியலிட்டுக் காட்டியுள்ளார்

1. பால்ய மணம் கூடாது.
2. பெண்கள் தாங்கள் விரும்பிய வரை மணம் செய்து கொள்ளும் உரிமை உண்டுபெற்றிக்கவேண்டும் அவர்கள் மனதிற்குப்பிடிக்காத ஒருவரை வற்புறுத்தி மணம் செய்விக்கக்கூடாது.

**வற்புறுத்திப் பெண்களைக் கட்டிக் கொடுக்கும் வழக்கத்தைத்**
**தள்ளி மிதித்திடுவோம் (பெண்கள் வீடுதலைக்கும்மி; - 5)**
**மாட்டையடித்து வசக்கித் தொழுவினில்**
**மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே (பா.க.ப.549)**

என்று வீரக் குரல் கொடுக்கின்றார்.

**பெண்சக்தி**

பாரதியார் பெண்ணைப் பாடும்போது பல இடங்களில் அவளைத் தெய்வாம்சம் கொண்ட சக்தியாகவே காட்டுகின்றார்.

**காதல் செய்யும் மனைவியே சக்தி காண்பீர்**

**கடவுள் நிலை அவளாலே எய்த வேண்டும் (சுயசரிதை)**

**தாய்க்கு மேலே இங்கோர் தெய்வமுண்டோ" (பாரதி-66)** என்றும் அருளாலன்றோ பிறந்தோம். பார்மேல்? என பெண்சக்தியை சாடுகிறார்.

**தேவதாசி முறை**

ஒழுக்கம், கற்பு, என்னும் கருத்துக்களில் ஆணுக்கொருநீதி, பெண்ணுக்கொருநீதி, என்ற ஒரு தலைப்பட்ட நீதி வழங்கியிருப்பதை வெளிப்படையாகக் காட்டும் நிறுவனம் தேவதாசி முறையாகும். ஆண்களின் வசதிக்காகவும், அவர்களின் இச்சையை அவர்கள் விரும்பியபடி பூர்த்திசெய்யவும் ஏற்படுத்தப்பட்ட ஒரு திட்டமாகும்.

தேவதாசி முறையின்படி சமூகத்தில் சில பெண்கள் கடவுளுக்குச் சேவை செய்வதற்காக தானம் செய்யப்பட்டனர். பெண்களுக்குச் கற்புநெறியை வலியுறுத்தும் அதே சமூக நியதி தான் தேவதாசி முறையும் மதத்தின் பெயரால் ஆதரித்தது. இதற்கு மதம் வலிமையான ஆதரவையும் அளித்துத் துணை நின்றது. தேவதாசிகளின் சமூகநிலை முரண்பட்ட பகுதிகளைக் கொண்டதாகும்.

**கைம்மை நிலை**

இந்தியாவில் பெண்ணுக்கென்று தனிப்பட்ட வாழ்க்கை கிடையாது. அவள் வாழ்விற்கு ஆதாரம் கணவனே. கணவனை இழந்த பெண்கள் வாழத் தகுதியற்றவர்களாகக் கருதப்பட்டனர். அவர்கள் தங்கள் வாழ்வில் நல்ல ஆடைகளையோ, அணிகலன்களையோ அணியக்கூடாது. அவர்கள் வாழ்வின் இன்பங்கள் அனைத்தையும் துறந்து மற்றவர்களின் ஆதரவில் பிழைப்பு நடத்த வேண்டிய நிலைமைக்கு உள்ளாயினர்.

**தற்கால இலக்கியங்களில் காணலாகும் பெண்கள் நிலை**

பெண்கள், மீது திணிக்கப்பட்டுள்ள மரபு கருத்துக்களின் வாயிலாக பெண்ணை உயர்த்துகின்ற அதே வேளையில் பெண் தன்னிச்சையாக தனித்துவத்துடன் இயங்குவதற்குத் தடைக்கல்லாகி பல்வேறு இன்னலகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். சமுதாயம் தன்மீது ஏற்றியுள்ள மரபு மதிப்புகளைக் காக்கப் பெண், பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டு, தன் சுய விருப்பு வெறுப்புகளை உள் மறைத்து சமுதாயத்தில் ஒரு கல்லாக உலா வர வேண்டியுள்ளது.

பெண்ணைப் பற்றியும் தமது கவிதைகளில் கையாண்ட முதல் கவிஞர் பாரதி என்றால் மிகையாகாது. பெண்ணைத் தெய்வமாகப் போற்றுகின்ற சமுதாயத்தில் பெண் பிறப்பை ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. சமூக சார்ந்த கட்டமைப்பின் கீழ் பெண்களை சித்தரிகின்றார்.

**பெண்மை வாழ்க வென்று கூத்திடுவோமடா**

**பெண்மை வெல்க வென்று கூத்திடுவோமடா**

என்று பாரதியின் வாக்கை மெய்பிக்கலாம்.

**மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல**

**மாதவஞ் செய்திடல் வேண்டும் அம்மா**

என கவிமணியும் பாடல்கள் மூலம் அறியலாம்.

கற்பு கோட்பாட்டினைப் பெண்களுக்கு மட்டுமே வலியுறுத்தப்பட்டுள்ளன. பெண்களுக்கு இன்றியமையாததாகக் கூறப்படும் 'கற்பு' ஆணுக்கும் இருக்க வேண்டும் என வலியுறுத்துகிறார்.

**கற்பு நிலை யென்று சொல்ல வந்தார்- இரு**

**கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்**

என்று பாரதியின் பாடல் மூலம் வெளிப்படுத்துகிறது.

**பெண் படைப்பாளர்களின் பார்வையில் பெண்ணியம்**

'மாதர் தம்மை இழிவு செய்யும் - மடமை கொளுத்;துவோம்' என்னும் பாவேந்தரின்பாடல் வரிகள் மூலம் பெண்ணியச் சிந்தனைகள் சித்தரிக்கப்படுகிறது. புதுமைப்பித்தனுக்குப் பிறகு தமிழ்ப் படைப்புலகம் வியந்தும், மகிழ்ந்தும், உச்சரிக்கும் பெயர் ஜெயகாந்தன். அவரே விதை, அவரே நீர், அவரே உரம் என்று கவிஞர்.கண்ணதாசன் புகழ்ந்துரைத்தது சரியே எனலாம். 'ஆபரணம் தீராத ரணம்;' என்னும் பாவேந்தரின் கவிதை வரியை நினைவூட்டுவதோடு பெண்ணியம் பேசும் இயக்கவாதிகள் பெண்களின் நகை மோகத்தை ஒழிக்க முனையவேண்டும். ''சமூகத்தாலும், பெற்றோராலும், புருஷர்களாலும் அவர்களுக்கு நேர்கிற அவமானங்கள், துன்பங்கள் ஒருபுறமிருக்க, நமது சமூகப் பெண்கள் தமக்குத்தாமே இழைத்துக்கொள்கிற கொடுமைகளிலிருந்து அவர்களை காந்தி நிச்சயம் காப்பாற்றக் கூடியவர்" என்பதை நான் கண்டிருக்கிறேன். நமது பெண் மக்களின் நகை மோகம், உடமை மோகம், ஆண்களுக்கு அடிமையாதல் ஆகியவை நிச்சயம் இதுபோல் இருக்க அவர் அனுமதிக்கமாட்டார்.

''ஆணும்,பெண்ணும்-சமம்" என்பது உண்மையாயின் பெண்கள் இவ்வளவு விலையுயர்ந்த ஆபரணங்களைச் சுமந்து திரிகிற அறியாமை என்ன? என்று கேட்டு நகைப்பிற்கு இடமளிக்காது. பெண்களின் உயர்வு சித்தரிக்கப்படுகிறது. பெண்களை வீட்டுக்குள்ளே பூட்டி வைக்கும் பழக்கம், அக்கால மனிதர்களின் விந்தையாக படைக்கப்பட்டது. புதுமைப் பெண்கள் தற்கால சிந்தனைகளுக்கு ஏற்ப வீர மகளிராக வீறு கொண்டு எழுந்து நடைப் பயிலுகிறாாகள். விடுதலை களத்திலிருந்து கள்ளுக்கடை மறியல்போர் மூலம் இன்று அழகு, அறிவு,உத்தியோகம், சம்பாதனை எல்லாம் பெற்று சுதந்திர இந்தியாவில் பாரதப் பெண்கள் கணிசமாக வளர்ந்து வருகின்றனர்.

**சிறுகதையின் பெண் படைப்பாளர்கள்**

சிறுகதை இலக்கிய வளர்ச்சியில் பெண் படைப்பாளர்களின் பங்களிப்பு மிகக் குறிப்பிடத்தக்கது. அன்றைய வை.மு.கோதைநாயகி அம்மாள் தொடங்கி இன்றைய குட்டி ரேவதி வரை பல பெண் படைப்பாளர்களும் தோன்றி தமிழ் இலக்கியத்தில் சிறுகதையின் பங்களிப்பு போற்றுதலுக்குரியதாகும். இதன் மூலம் இலக்கியம் பணிகளில் பெண் படைப்பாளர்களின் எழுத்து சுதந்திரத்தை அறியலாம்.

பெண்களின் சிக்கல்களை 1970 - களுக்குப் பிறகு நேரடியாக பெண்களே பேசக் களத்தில் இறங்கினர். அதன் விளைவாக பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள் உலக அரங்கில் உள்ளது உள்ளபடி அரங்கேறத் தொடங்கின.

**முடிவுரை**

**ஒற்றைக் குடும்பந் தனியே**
**பொருள் ஓங்க வளர்ப்பவன் தந்தை**
**மற்றைக் கருமங்கள் செய்தே**
**மனை வாழ்ந்திடச் செய்பவள் அன்னை (பா.க.ப.537)**

என்ற பாரதியாரின் பாடல் மூலம் வருகின்ற பொருளாதாரச் சூழல் காரணமாகக் குடும்பத்தில் ஆணும், பெண்ணும் சரிநகர் சமமாக வாழும் நெறியாக ஆகிவிட்டது. ஆயினும் ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொருநீதி என்ற சமூக நீதி முறையும், ஆண் உயர்ந்தவன், பெண் தாழ்ந்தவள் என்ற கருத்தும் சங்க காலம் முதல் தமிழர் சமூகத்தில் காணப்படுகின்றன. இவை காப்பிய காலங்களில் மேலும் வலிமையுற்று பெண்களின் நிலை வீழ்ச்சியுறக் காரணமாயின. காப்பிய நூல்களைத் தொடர்ந்து வந்த நீதி நூல்கள், ஆரம்பகால கட்ட நாவல், கவிதை, சிறுகதையில் பெண்களின் நிலை வீழ்ச்சியிலேய இருந்தது.

20 ஆம் நூற்றாண்டில் பெண்களின் நிலை முன்னேற்றமடைந்து காணப்படுகிறது.

**பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் புவிப்**
**பேணி வளர்த்திடும் ஈசன்,**
**மண்ணுக்குள்ளே சில மூடர் நல்ல**
**மாதரறிவைக் கெடுத்தார் (பா.க.ப.538)**

பெண்களின் எழுச்சியை இந்த வையகம் போற்றும் என்பதை அறிய முடிகின்றது.

**பார்வை நூல்கள்**

1. ஜெயரதி, வண்ணங்கள் மாறுவதில்லை
2. பாரதியார், பாரதியாரின் கவிதைகள்
3. தமிழண்ணல், திருக்குறள்
4. டாக்டர்.சரோஜினி, வாழ்வியல் விழுமியங்கள்
5. முனைவர்.ச.முத்துச்சிதம்பரம், பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும்